# தமிழ் இலக்கிய போற்றும் இறைமை

**முனைவர் க.விஜயராகவன்**
உதவிப் பேராசிரியர் & தலைவர், தமிழ்த்துறை
சோனா கலை & அறிவியல் கல்லூரி
சேலம்

**மலர்:** 3

**இதழ்:** 2

**தொகுதி:** 1

**மாதம்:** அக்டோபர்

**வருடம்:** 2018

**ISSN:** 2454-3993

இப்பரந்த உலகிடைத் தோன்றிய மனிதன் தான் வாழும் சூழ்நிலைக்கு ஏற்ப பல்வேறு மொழிகளைத் தோற்றுவித்தான். அவற்றுள் சில நன்கு வளர்ச்சியடைந்துள்ளன. சிறப்படைந்துள்ள மொழிகளில் தமிழ் மொழியும் ஒன்று. உலகமொழிகளுள் காலத்தால் வரையறுக்கப்படாதும், உயர்தனிச் செம்மொழியாய் விளங்குவதும் தமிழ்மொழியே. தமிழ் மொழியில் தோன்றிய இலக்கிய நூல்கள் பற்பல. அவற்றில் சமயம் தொடர்பான இலக்கியங்கள், பல்வேறு சமயப் புலவர்களால் காலந்தோறும் இயற்றப்பட்டுள்ளன. சமய இலக்கியங்கள் நிரம்பிய சுந்தரமொழியெனத் தமிழைச் சிறப்பித்தாலும் அது மிகையன்று.

சாதாரணமனிதன் உயர்ந்தவனாக சிறந்தவனாக மேம்பட்டவனாக விளங்குவதற்கு எண்ணற்ற கருத்தியல் கூறுகள் காரணாமாக இருந்தாலும், சமயம் என்பது அதனுள் தனியிடம் பெற்றே வந்துள்ளது. சமயத்தின் அறநெறி உலகவாழ்க்கையோடு மதவாழ்க்கையையும் சரியான நிலைப்பாட்டுடன் சமூகத்திற்குப் போதித்து மனிதன் உயர்கதி பெற்று உலகில் நிலைத்து வாழ வழி காட்டுகிறது என்றே கூறலாம்.

‘சமயம்’ என்னும் சொல் ‘சமைத்துப் பக்குவப்படுத்தல் ’என்னும் பொருளில் தோன்றியது. கொள்கை, கோட்பாடு, குறிக்கோள் என்னும் பொருளில் சமயம் அமைந்தது. மனித வாழ்க்கைப் பயணத்திற்கு வழியாக அமையக்கூடிய காரண அடிப்படையில் நெறி, வழி ஆகிய சொற்கள் அமைந்தன. சமுதாயக் கூட்டு வாழ்க்கைக்கு மனிதன் பண்படவேண்டும். தனிமனித வாழ்க்கையாகிய விலங்கு வாழ்க்கையிலிருந்து மனிதன் பண்படவேண்டும் என்று முன்னோர்கள் வகுத்துக்காட்டிய நெறிகள் துணையாக அமைந்தன. உணவுப் பொருளை நேரடியாக உண்ணாமல் சமைத்தப் பிறகே அவற்றை அவித்து, வேகவைத்துச் உண்ணுகிறோம். அதுபோல பக்குவமில்லாத-பண்பில்லாத விலங்காக வாழும் மனிதனைச் சமைத்துப் பக்குவப்படுத்த தோன்றியது சமயம். ஒழுங்கான மனித சமுதாயம் தழைத்தோங்கி இருந்தமைக்குச் சமயங்களும் காரணமாக இருந்துள்ளன.

கடவுள்-மனித வாழ்வு என்ற இவை இரண்டிற்கும் உள்ள தொடர்பு வாழ்விலிருந்து கடவுளை அடையும் மார்க்கங்களை தெளிவுப்படுத்துவதே சமயம். மனிதரை நெறிப்படுத்துவதற்கும்

முறைப்படுத்துவதற்கும் தோன்றிய சமயநெறி அவற்றின் நடைமுறையால் மாறுபட்டு முரண்பட்டுப் போயின. உண்மையில் சமயம் என்பது தூயவாழ்க்கை முறை. மனிதனை நெறிப்படுத்திப் பக்குவப்படுத்தும் வாழ்வியல் அனுபவமுறை. மனிதனுடைய குறைநீக்கத்திற்கும், நிறைநலபேற்றிக்கும் சமய வாழ்க்கையே துணை செய்யும். புலன்களை பக்குவப்படுத்தும், தூய்மையடையச் செய்யவும் சமயங்கள் அன்பை மையமாக் கொண்டுவிளங்கின.

முன்னோர்களின் அனுபவத்தில் தோன்றிய நெறிகள் பின்னோரின் வாழ்க்கைப் பாதைக்கு வழிகாட்டின. ஐம்பூதங்களை வணங்கியவர்களை அவைகளுக்கு அப்பாலும் இறைவன் உண்டு என்று நெறிப்படுத்தியதே சமயம். அவை அனைத்தும் ஒருவரன் முறைக்கு உட்பட்டு இயங்குவதையும் காணமுடிகிறது.

**“ஒன்றேகுலம் ஒருவனேதேவன்”**

என்பது திருமுலர் வாக்கு. ஆருயிர்க்கெல்லாம் அன்பு செய்தல் வேண்டும் என்பதே இறையாண்மைக்கு வள்ளலார் காட்டிய நெறி.

**“அன்பும் சிவமும் இரண்டென்பர்அறிவிலார்**
**அன்பேசிவமாவதுஆரும் அறிகிலார்**
**அன்பேசிவமாவதுஆரும் அறிந்தபின்**
**அன்பேசிவமாய் அமர்ந்திருந்தாரே”** **(திருமந்திரம்-270)**

என்னும் திருமந்திரப் பாடல் இவ்வுண்மையைஉணர்த்தும்.

## இறையாண்மையின் வழித்தடம்

சைவம், வைணவம், பௌத்தம், கிறித்தவம், சமணம், இஸ்லாம் என பற்பல சமயங்கள் தமிழிலக்கிய உலகில் காணப்படுகின்றன. அவை காட்டும் நெறிவழிச் சென்றால், முடிவில் ‘பரம்பொருள் ஒன்றே’ என்ற கருத்திலேயே நிறைவுறுகின்றன. மக்களின் மனநிலைக்கு ஏற்றவாறு இச்சமயங்கள் எல்லாம் தத்தம் கருத்துகளைத் தெரிவிக்கின்றன.

**“பொங்குபலசமயமெனும் நதிகள் எலாம்**
**புகுந்துகலந்திடநிறைவாய்ப் பொங்கிஓங்கும்**
**கங்குகரைகாணாதகடலே”**

ஆறுகள் எல்லாம் எங்குத் தோன்றினாலும். எத்திசை நோக்கி ஓடினாலும், முடிவில் கடலினையே சென்றடைவது போல உலகத்தில் தோன்றிய சமயங்கள் எல்லாம் முடிவில் பரம்பொருளினிடத்தே சென்றடைகின்றன என்றுணர்த்துகிறார் வள்ளாலார்.

இலக்கியங்களும் சமயங்களும் சமுதாயத்தில் இருந்து முகிழ்க்கின்றன. சமுதாய வாழ்வியலில ்இருந்து வெளி வருகின்றன. இதனால் அந்தந்தக் காலத்து மக்களின் ஒழுக்கமுறைகளை, பழக்கவழக்கங்களை, பண்பாடுகளைத் தெற்றென விளக்குவன சமயஇலக்கியங்கள். பெரும்பாலான இலக்கியங்கள் காட்டும் சமயப் பொறையினைக் கண்டுதெளிந்து, வாழ்வியலை மேற்கொள்ள வேண்டியது இக்கால இளையர்களுக்கு இன்றியமையாத தேவை.

## தொல்காப்பியர்

குறிப்பிட்ட ஒரு சமயத்தின் சாயல் பெறாமல் கடவுட் கொள்கைப்பற்றி பேசும் ஆதி நூல் தொல்காப்பியம். அதில் சமயம் இடம் பெறுகிறது. தொல்காப்பியர் காலத்தும், அவர்க்கு முந்தைய காலத்தும் இறைவனை வழிபடும் முறை இருந்துள்ளது. அக்காலத்து மக்கள் ஐம்பூதங்களையும், முருகன், திருமால், கொற்றவை முதலான தெய்வங்களையும் வழிபாடு செய்தனர் என்பதை அறிய முடிகிறது.

**“மாயோன் மேயகாடுறைஉலகமும்**
**சேயோன் மேயமைவரைஉலகமும்**
**வேந்தன் மேயதீம்புனல் உலகமும்**
**வருணன் மேயபெருமணல் உலகமும்”** **(தொல். அகத்.5)**

எனும் வரிகள் வாயிலாக அக்காலத்தில் பல கடவுளரை வணங்கும் நிலை இருந்தது என்பதையும், அவர்களுக்குள் ‘சமயக் காழ்ப்புணர்ச்சி’ இல்லை என்பதையும் அறியலாம். வேறுபாடுகளைக் கடந்து மனிதகுலப் பொதுமையைச் சமயம் வலியுறுத்தியது.

**“யாதும் ஊரேயாவரும் கேளிர்**
**தீதும் நன்றும் பிறர்தரவாரா”**

என்னும் கணியன் பூங்குன்றனார் பாடல் உண்மையான சமயநெறியை உணர்த்துகிறது.

**வள்ளுவர்**

சமயக் கருத்து வேறுபாடு நிலவிய காலத்தில் மக்களை, அறவழிக்குட்படுத்த எழுந்தவையே நீதி இலக்கியம். அவ்வகையில் திருக்குறள் முதன்மையானது. ‘இறைவன் ஒருவனே! அவன்தான் பரம்பொருள்! முழுமுதற் பொருள்!’ என்று குறிப்பிடுகிறது. ‘கடவுள் வாழ்த்து’ பகுதியில் சமயப் பொதுமை நிலையில் இறைவனின் திருவடிச் சிறப்பைச் சுட்டிக்காட்டியுள்ளார். இறை வழிபாடு என்புத திணை, பால் கடந்த பொதுமை வழிபாடாகும்.

**இலக்கியங்களில் இறையாண்மை**

ஏழாம் நூற்றாண்டில் அப்பர் பாடிய ‘திருத்தாண்டகம்;’ பதினைந்தாம் நூற்றாண்டில், அருணகிரி பாடிய ‘சீர்பாதவகுப்பும்’ பத்தொன்பதாம் நூற்றாண்டில் வள்ளலார் பாடிய ‘திருவடிப் புகழ்ச்சியும்’ சமயப் பொறையை வலியுறுத்துகின்றன. பயன் கருதாத வழிபாட்டை வேண்டி, ‘அன்பும், அறனும் அருளும;’ மூன்றும் வேண்டும் என வேண்டி விழைவது சமயம். இறைவனிடத்து மனிதன் வேண்டுவது என்ன என்பதை,

**“பொருளும் பொன்னும் போகமும் அல்லநின்பால்**
**அருளும் அன்பும் அறனும் ஒலிதாரோயே”**

எனப் பரிபாடல் ஒன்று சிறந்த முறையில் கூறுகிறது.

**காப்பிய இலக்கியங்கள்**

காப்பிய இலக்கியங்களில் சிலப்பதிகாரம், மணிமேகலை, கம்பராமாயணம், சீவகசிந்தாமணி போன்ற குறிப்பிடத்தக்க இலக்கியங்கள் அந்தந்தக் காலத்துச் சமயப் பொறையினை எடுத்துக் காட்டுகின்றன. சிலப்பதிகாரத்தில் சைவம், வைணவம், பௌத்தம் முதலிய சமயங்களை எடுத்துக் கூறுவதன் மூலம் சமயச் சார்பற்ற காலமாகச் சிலப்பதிகாரம் இருந்துள்ளமையை அறியலாம். மதுரைக் காண்டத்துள் வேட்டுவவரியில் ‘சிவனுக்குநெற்றிக்கண் உண்டு’, ‘நீலகண்டன் ஆனான்’, ‘திரிபுரத்தை எரித்தான், ‘கொன்றைமாலையைத் தரித்தவன்’ என்று சிவன் சிறப்பு கூறப்படுகிறது. வைணவ சமயக் கடவுள் திருமாலைப் பற்றிச் சிலம்பில் காணலாம். ஆய்ச்சியர் குரவையில்,

**“கன்றுகுணிலாக் கனியுதிர்த்தமாயவன்”**

என்ற குறிப்பும், திருமாலின் பெரிய கோயில் எனப்படும் ‘திருவரங்கம்’ பற்றிய குறிப்பும், திருமால் ஆதிசேடன் மீது பள்ளிகொண்டுள்ளான் என்ற குறிப்பும் ‘காடுகாண்காதை’யில் காணப்படுகின்றன. மேலும் அவனுடைய திருவுருவநலன்களும், அவன் ஆயுதங்கள் ஏந்திநிற்கும் திறமும், நின்ற கோலமும், கிடந்த கோலமும் கூறப்பட்டுள்ளன. சிலம்பின் கதை மாந்தர் சிலர் சமணக்கதை மாந்தர்களாகவே வந்துள்ளனர். கவுந்தியடிகள், மாங்காட்டுமறையோன் முதலானோரைக் குறிப்பிடலாம். சமயத்தால் சமுதாயம் வேறுபாடு கொள்ளாமல் வாழ முடியும் என்பது குறிப்பிடத்தக்கது.

வைணவக் காப்பியமான கம்ப இராமாயணம் பிறசமயக் கடவுள் பற்றியும் கூறுகின்றது. இக்காப்பியத்துள் இராவணன், வாலி முதலானோரைச் சைவ சமயக் கடவுளான சிவனின் பக்தர்களாகவே படைத்துள்ளார் கம்பர். வாலியைப் பற்றிக் கூறுமிடத்து,

**"பஞ்சின் மெல் அடியாள்**
**பங்கன் பாதுகம் அலாதுயாதும்**
**அஞ்சலித்துஅறியாச் செங்கை"**

உடையவன் என்றும், 'அட்டமூர்த்தி தாள் பணியும் அன்பன்' என்றும் குறிப்பிடுகிறார். இராவணனைப் பற்றிக் குறிப்பிடும்போது 'சிவபெருமானால் முக்கோடிவாழ்நாள் வழங்கப் பெற்றவன;' என்றும், 'துள்ளுநீர் வெள்ளம் சென்னி ஏற்றவன்' என்றும் குறிப்பிடுகிறார். மேலும் சிந்தாமணி, மணிமேகலை முதலிய காப்பியங்களும், சமயக் காழ்ப்பற்ற நிலையினை விளக்கப் பல தெய்வங்களைக் குறிப்பிடுகின்றன. காப்பிய காலத்திலும ˙சமயச் சார்பற்ற சமுதாயத்தை ஏற்படுத்தவே முன்னோர்கள் முயன்றுள்ளார்கள்.

**அருளாளர்களின் சமயப்பொறை**

மனித இனத்தைத் தீமைகளிலிருந்து விலக்கி நல்வழிப்படுத்துவதற்கு ஒவ்வொரு காலகட்டத்திலும் அருளாளர்கள், பெரியோர்கள் தோன்றியுள்ளனர். அவர்கள் எல்லாம் சமுதாயத்திற்குச் சமயம் தேவை என்றும் 'பரம்பொருள் ஒன்று, அதனை அடையும் வழிகளே இச்சமயங்கள்' என்றும் எடுத்துரைத்துள்ளனர்

**"ஒன்றேகுலமும் ஒருவனே தேவனும்**
**ஒன்றதுபேரூர்,வழியாறு அதற்குள"**

என்று திருமூலரும்,

**"சாதியிலே மதங்களிலே சமயநெறிகளிலே**
**சாத்திரசந்தடிகளிலே கோத்திரச் சண்டையிலே**
**ஆதியிலே அபிமானித் தலைகின்ற உலகீர்!**
**அலைந்துஅலைந்து வீணேநீர் அழிதல் அழகலவே**
**நீதியிலே சன்மார்க்க நிலைதனிலே நிறுத்த**
**நிருத்தமிடும் அருட்சோதி விளையாடல் புரிய**
**மேவுகின்றதருணம் இது கூவுகின்றேன் உமையே"**

என்று வள்ளலாரும், இறையாண்மை குறித்து சமயப் பொறையுடைமை பேசியுள்ளது குறிப்பிடத்தக்கது. இவர்களைப்போல தாயுமானவர், அருணந்திசிவாச்சாரியார் போன்ற சான்றோர்களும் சமயப் பொதுவுடைமை காட்டியுள்ளனர்.

சமயவேறுபாடற்ற சமயப் பொறையுடைமை, இறையாண்மை உணர்வினைத் தமிழ் இலக்கியங்கள் மனித சமூகத்தின் மீது காட்டியதை அறிய முடிகிறது. சமயக் கருத்தை உருவாக்கியவர்களும், உணர்த்தியவர்களும் தலைச்சிறந்த மனித சமுதாயத்தை உருவாக்கிடவே சமயம் எனும் கொள்கை நிலைபாட்டினைக் கையாண்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.